**13.04.2023**

**அ.வ.எண். <u>232/2012</u>**

**<u>பி.சா.1 தனலட்சுமி அவர்களின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. ராமதாஸின் தகப்பனார் பெயர் துரைசாமி என்றால் சரிதான். நெல்வாய் மற்றும் பெருங்கோழி கிராமங்களில் சொத்துக்கள் வாங்குவதற்கு முன்பு ராமதாஸ்க்கு எங்கெங்கு சொத்துக்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. ராமதாஸ் அவரது எந்த சொத்தினை விற்று பெருங்கோழி கிராமத்தில் சொத்துக்கள் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. மலையாங்குளம், காட்டுக்கொள்ளை கிராமத்தில் ராமதாஸ்க்கு சொத்துக்கள் இருந்தன என்றால் எனக்கு தெரியாது. அந்த சொத்துக்களை ராமதாஸ் எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்றும் எந்த வருடம் கிரையம் கொடுத்தார் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. பாளேஸ்வரம் கிராமத்தில் ராமதாஸ் சொத்துக்களை கிரையம் வாங்கி விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியாது. பாளேஸ்வரம் கிராமத்தில் சொத்துக்களை கிரையம் வாங்குவதற்கு முன்பு நாமக்கல் மாவட்டம், நல்லப்பன்நாயக்கன்பட்டி ஊரில் இருந்த தனது பூர்வீக சொத்துக்களை ராமதாஸ் விற்றுவிட்டார் என்றால் எனக்கு தெரியாது.

3. எனக்கு படிப்பறிவு இல்லை. சின்னக்கா என்பவருக்கு நானும், எனது தம்பியும் வாரிசுகள். எனது தம்பி 8ம் வகுப்பு வரை படித்துள்ளார். எனது தம்பியின் கல்வி சான்றிதழை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எனக்கு தமிழ் படிக்க தெரியாது. நான் ராமதாஸ் மகள் என்று காண்பிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்று எனக்கு தெரியாது. எனக்கு எந்த வயதில் திருமணம் நடந்தது என்று தெரியாது.

4. ராமதாஸ் என்பவருக்கும் நாச்சியம்மாள் (எ) லட்சுமி என்பவருக்கும் தான் திருமணம் நடந்தது என்றாலும் அவர்களது வாழ்நாள் முழுவதும் அவர்களுக்கு விவாகரத்து எதுவும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி ராமதாஸ் மற்றும் நாச்சியம்மாள் ஆகியோருக்கு ராமன், மாயவன், சிவலிங்கம் மற்றும் விநாயகம் ஆகியோர்கள் மகன்கள் என்றால் சரியல்ல.

5. எனது தாயார் சின்னக்கா என்பவரின் சட்டபூர்வமான கணவர் அர்ச்சுனன் என்றால் சரியல்ல. மேற்படி சின்னக்கா, அர்ச்சுனன் ஆகியோர்களுக்கு வாழ்நாள் முழுவதும் விவாகரத்து எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. ஆனாலும் ராமதாஸ் மற்றும் சின்னக்கா ஆகியோர்களுக்கு தொடர்பு இருந்தது என்றால்

சரியல்ல.

6. தவறான உறவு வைத்து சின்னக்கா என்பவர் ராமதாஸ் என்பவரை தனது கணவர் என்று குறிப்பிடுவது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எனது தாயாரின் தவறான உறவின் அடிப்படையில் ராமதாஸ் என்பவர் எங்களது தகப்பனார் என்று நானும், எனது தம்பியும் உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. எனது தாயார் சின்னக்காவிற்கு சொத்துக்களை கிரையம் வாங்குவதற்கு போதிய வருமானம் இல்லை என்றாலும் ராமதாஸ் உடன் இருந்த தொடர்பை பயன்படுத்தி கிரைய ஆவணங்களில் அவரது பெயரை சேர்த்துவிட்டார் என்றாலும் சரியல்ல.

7. ராமதாஸ் பூர்வீக சொத்துக்கள் மற்றும் சுயசொத்துக்களை விற்று தான் அவர் தாவா சொத்தினை கிரையம் வாங்கினார் என்றாலும் அதில் வாதி மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு மட்டும் தான் உரிமையுள்ளது என்றாலும் எங்களுக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. ராமதாஸ் பர்மாவிலிருந்து இந்தியாவிற்கு வந்தார் என்று எனது பதிலுரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் நான் சொல்லவில்லை. அதற்கான ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை.

8. ராமதாஸின் மற்ற வாரிசுகள் ராமன், சிவலிங்கம், விநாயம் ஆகியோர்களை

எனக்கு தெரியாது. விநாயகம் என்பவர் இறந்துவிட்டார் என்றாலும் அவரது வாரிசுகள் மனைவி விஜயா, மகன்கள் பழநி, ராஜா, மகள்கள் பழனியம்மாள், லட்சுமி ஆகியோர்கள் என்றாலும் எனக்கு தெரியாது. தாவா சொத்தினை நானும், எனது தம்பியும் அனுபவித்து வருகிறோம் என்று காண்பிப்பதற்கு எங்கள் பெயரில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. தாவா சொத்திற்கு நான் வரி செலுத்தியுள்ளேன். எந்த வருடம் என்று எனக்கு தெரியாது. எனது தாயார் சின்னக்கா தாவா சொத்திற்கு வரி செலுத்தியுள்ளார்களா என்றால் செலுத்தியிருப்பார்கள், நான் பார்க்கவில்லை. சின்னக்கா என்பவர் தனிப்பட்ட முறையில் தாவா சொத்தினை அனுபவித்ததில்லை என்றால் சரியல்ல. எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை சின்னக்கா தாவா சொத்தினை அனுபவித்தார் என்றால் எனக்கு தெரியாது.

10. எந்த வருடத்திலிருந்து நான் தாவா சொத்தினை அனுபவித்து வருகிறேன் என்றால் வருடம் எனக்கு தெரியாது. தாவா சொத்தினை எனது தாயார் சின்னக்கா அனுபவித்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தினை நான் அனுபவித்தேன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சிட்டா, அடங்கல் மற்றும் வரி ரசீதுகள் உள்ளது. ராமதாஸ் எந்த

வருடம் இறந்தார் என்றால் சுமார் 25 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். இன்றைய தேதி வரை தாவா சொத்திற்கான பட்டா ராமதாஸ் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். ராமதாஸ் மற்றும் சின்னக்கா பெயரிலுள்ள கூட்டுப்பட்டா இன்றைய தேதி வரை மாறாமல் உள்ளது என்றால் சரிதான்.

11. தாவா 2 இன சொத்துக்களுக்கும் இன்றைய தேதி வரை ராமதாஸ் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.6 வரை உள்ள ஆவணங்கள் நாங்கள் கொடுக்கும் தகவலின் அடிப்படையில் வழங்கப்பட்ட ஆவணங்கள் என்றாலும் அதனை வைத்துக்கொண்டு ராமதாஸ் என்பவர் தான் எனது தகப்பனார் என்று முடிவு செய்யமுடியாது என்றாலும் சரியல்ல, ராமதாஸ் தான் எனது தகப்பனார்.

12. பி.சா.ஆ.7 ல் எனது தாயாரின் கணவர் பெயரும், எனது தம்பியின் தகப்பனார் பெயரும் குறிப்பிடவில்லை என்றால் தம்பியின் தகப்பனார் பெயர் அர்ச்சுனன். மீண்டும் சாட்சி எனது தகப்பனார் பெயர் ராமதாஸ் என்று கூறுகிறார். பி.சா.ஆ.7 ல் வழக்கறிஞர் காண்பிக்கும் இடத்தில் (குடும்ப தலைவர் கையொப்பம் ) கையொப்பம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு படிப்பறிவு இல்லாத காரணத்தினால் நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்கள் பற்றியும்

எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

13. பி.சா.ஆ.13ல் இரண்டு ஆவணங்கள் தாக்கல் செய்து ஒன்றுக்கு மட்டும் நீதிமன்ற வில்லை செலுத்தியதால் அந்த ஆவணம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் குறித்து எனக்கு தெரியாததாலும் அது குறித்து தெரியாது என்று நான் சாட்சியம் அளிப்பதாலும் அந்த ஆவணங்கள் அனைத்தும் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. வாதியும், 1 முதல் 6 பிரதிவாதிகளும் மட்டும் தான் ராமதாஸின் வாரிசுகள் என்றாலும் அவர்களுக்கு மட்டும் தான் தாவா சொத்தில் உரிமையுள்ளது என்றாலும் சரியல்ல.

14. ராமதாஸ் என்பவருக்கு மாயவன் மற்றும் அவரது சகோதரர்கள் வாரிசுகள் என்றால் அது குறித்து நான் எப்படி சொல்லமுடியும். இல்லை என்பதால் தான் என்னால் சொல்ல முடியவில்லை.

(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).